அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 07/2020(I)

எனது இலக்கம் : 06/04/LOANS/4072
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2020.03.29

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்களுக்கு

**புதிய கொரோனா வைரஸ் காரணமாக, எழுந்துள்ள நிலைமையைக் கருத்திற் கொண்டு அரச உத்தியாகத்தர்களுக்கு நிவாரணம் வழங்குதல்**

மேற்படி தலைப்பில் 2020.03.26 ஆந் திகதியன்று வெளியிடப்பட்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 07/2020 இன் 02 ஆம் பிரிவு, ஜனாதிபதியின் கட்டளையின் பிரகாரம் அமைக்கப்பட்டுள்ள. புதிய கொரோனா வைரஸ் நிலைமையை இலங்கையிலிருந்து இல்லாதொழிக்கும் காலப் பகுதியினுள் மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலையில் நடாத்திச் செல்லும் பொருட்டு தேவைப்படும் பொருட்கள், சேவைகள் மற்றும் ஏனைய வசதிகளை தொடர்ச்சியாக வழங்கப்படுதல் செயற்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் பின்னாய்வு நடவடிக்கைகளின் பொருட்டு நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதிச் செயலணியினரின் அறிவுரைகளுக்கமைய கீழ் உள்ளவாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

> **“02. 2020 ஏப்ரல் மாதச் சம்பளம், ஏப்ரல் மாதம் 08 ஆந் திகதியன்று செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், நிலவுகின்ற விசேடமான நிலைமையைக் கருத்திற் கொண்டு சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டின் பொருட்டான விழா முற்பணம் அமைய மற்றும் பதிலீட்டு அடிப்படையின் கீழ் சேவையாற்றுகின்றவர்களுக்கு மட்டும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.”**

02. மேலும், புதிய கொரோனா வைரஸ் விரிடைந்து செல்வதைக் கட்டுப்படுத்தும் பொருட்டு அரச உத்தியோகத்தர்களுக்கு விசேட விடுமுறை வழங்குவதற்கு ஆரம்பிக்கப்பட்ட திகதி வரையிலும், அமைய அல்லது பதிலீட்டு அடிப்படையில் அரச நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு, அவ்விசேட விடுமுறை ஆரம்பிக்கப்பட்ட திகதியின் பின்னர் சேவைக்கு அறிக்கையிடாதிருப்பினும், இவ்வருடத்தின் ஏப்ரல் மற்றும் மே மாதங்களின் பொருட்டு நிரந்தர அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு குறித்தளிக்கப்பட்ட திகதி வரையில், விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ள நாட்களின் பொருட்டு அவர்கள் சேவைக்கு அறிக்கையிடப்பட்டவர்களாகக் கருதி உரிய முறையில் நாளாந்த சம்பளம் வழங்குவதற்கு சகல நிறுவனங்களின் தலைவர்களும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

03. இச்சுற்றறிக்கை ஜனாதிபதி அலுவலகத்தின் அறிவுரைக்கமையவும் மற்றும் பொதுத் திறைசேரியின் இணக்கப்பாட்டுடன வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்./ எஸ். ஹெட்டிஆரச்சி
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு